# இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) நிறைவேற்றிய கட்டளைகள்

## இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) நிறைவேற்றிய கட்டளைகள்

وَإِذِ ابْتَلَى إِبْرَاهِيمَ رَبُّهُ بِكَلِمَاتٍ فَأَتَمَّهُنَّ قَالَ إِنِّي جَاعِلُكَ لِلنَّاسِ إِمَامًا قَالَ وَمِن ذُرِّيَّتِي

قَالَ لاَ يَنَالُ عَهْدِي الظَّالِمِينَ

இந்த வசனத்தில் இறைவன் தமது தோழர் இப்றாஹீம்(அலை ஹிஸ்ஸலாம்) அவர்களின் மாண்பை விவரிக்கிறான். இறைக்கட்டளைகளை அவர்கள் நிறைவேற்றிவிட்டதால் ஏக இறைவனின் முன்மாதிரித்தலைவராக அல்லாஹ் அவர்களை ஆக்கியுள்ளான். இதையே 'இப்றாஹீமை அலைஹிஸ்ஸலாம் அவருடைய இறைவன் பல கட்டளைகள் மூலம் சோதித்ததை எண்ணிப்பாருங்கள்' என்று அல்லாஹ் கூறியிருப்பது மிகவும் சிந்திக்கத்தக்கதாகும்.

(இறைதூதர்) இப்றாஹீமை அலை ஹிஸ்ஸலாமை அவரது இறைவன் பல கட்டளைகள் மூலம் சோதித்தபோது அவற்றை அவர் முழுமையாக நிறைவேற்றினார்.

**(அல் குர் ஆன் 2:124)**

இப்றாஹீம்(அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடைய மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு விட்டு பின்னர் அதிலிருந்து நழுவிவிட்ட வேதக்காரர்களுக்கும் , இணைவைப்போருக்கும் ' இறைவன் சில கட்டளைகள் முலம் மற்றும் தடைகள் மூலம் சோதித்ததை நினைவூட்டுவதற்கு முஹம்மது நபி(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு இறைவன் கட்டளையிட்டுள்ளான்.

இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் ஒரு சமுதாயமாகவும் , இறைவனுக்கு அடிபணிந்தவராகவும் , உண்மை வழியில் நின்றவராகவும் இருந்தார்.அவர் இணைவைப்பரில் ஒருவராக இருந்ததில்லை. இறைவனின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துபவராகவும் இருந்தார்.(ஆகவே) அவரை அவன் தேர்ந்தெடுத்தான்.நேரான வழியில் அவரைச் செலுத்தினான்.

**(அல் குர் ஆன்16:120,121)**

இப்றாஹீம் அலை ஹிஸ்ஸலாம் யூதராகவோ ,கிறித்தவராகவோ இருந்ததில்லை , மாறாக,அவர் உண்மை வழியில் நின்ற முஸ்லிமாக இருந்தார். இணைவைப்பவர்களில் ஒருவராக இருந்ததில்லை. இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் முக்கு மிக நெருக்கமான மக்கள் அவரைப் பின்பற்றியோரும், இந்த நபியும், நமபிக்கை கொண்டோரும் தாம் அல்லாஹ் இறைநம்பிக்கை கொண்டோரின் பாதுகாவலன் ஆவான்.

**(அல் குர் ஆன் 3:67,68)**

## இப்றாஹீம் (அலை) நிறைவேற்றிய கட்டளைகள்

பல கட்டளைகள் என்பதைக் குறிக்க இந்த **(அல் குர் ஆன் 124)** வது வசனத்தின் மூலத்தில்'கலிமாத்" ثملك' எனும் சொல் ஆளப்பட்டுள்ளது. மார்க்க விதிகள் , இறைக்கட்டளைகள், தடைகள் ஆகியவற்றைக் இது குறிக்கும். அவற்றை இப்றாஹீம் (அலை ஹிஸ்ஸலாம்) அவர்கள் நிறைவேற்றினார்கள். முழுமையாகக் கடைபிடித்தார்கள். அதையடுத்து 'மக்களால் பின்பற்றப்படவேண்டிய முன்மாதிரித் தலைவராக உம்மை நாம் ஆக்குவோம் ' என அல்லாஹ் அறிவித்தான்.

இறைநேசர் இப்றாஹீம் (அலை ஹிஸ்ஸலாம்) அவர்கள் எந்தக் கட்டளைகளால் அல்லாஹ் சோதித்தான் என்பது தொடர்பாக அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

இப்னு அப்பாஸ்(ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள், ‘ புனித ஹஜ் கிரியைகள்தாம் அவை ’ என்று கூறினார்கள். மற்றொரு அறிவிப்பில் தூய்மை தொடர்பான சில கட்டளைகளை இப்றாஹீம் அவர்களுக்கு இறைவன் பிறப்பித்தான்.

தலைப்பகுதியில் பேணவேண்டிய ஐந்து தூய்மைகளும் ,இதர உறுப்புகளில் பேண வேண்டிய ஐந்து தூய்மைகளும் அவற்றில் இருந்தன.

**தலையில் மேற்கொள்ள வேண்டிய ஐந்து தூய்மைகள்!**

1. மீசையை கத்தரித்தல்.
2. வாய் கொப்பளித்தல்.
3. நாசிக்கு தண்ணீர் செலுத்துதல்.
4. பல் துலக்குதல்.
5. தலைவாருதல்

**உடலில் மேற் கொள்ள வேண்டிய ஐந்து தூய்மைகள்**

1. நகங்களை வெட்டுதல்.
2. மர்ம உறுப்பைச் சுற்றியுள்ள முடியை மழித்தல்.
3. விருத்த சேதனம் செய்தல்.
4. அக்குள் முடியை அகற்றுதல்.
5. இயற்கைக் கடனை முடித்த பின் மலஜலம் பட்டபகுதியை தண்ணீரால் கழுவுதல் ஆகியனவாகும்.

இதே கருத்துகளைப் போன்று தூய்மைகளைப்பற்றி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் வலியுறுத்திக்கூறியுள்ளனர்.அவயாவனை:-

**இயற்கை மரபுகள் ஐந்தாகும். அவை:**

1. விருத்தசேதனம் செய்தல்,
2. மர்ம உறுப்பின் முடியைக் களைய அகற்றுதல்.
3. மீசையைக் கத்தரித்தல்.
4. நகங்களை வெட்டுதல்.
5. அக்குள் முடியை அகற்றுதல் ஆகியனவாகும்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு)

**(ஆதாரம்: புகாரி-5889முஸ்லிம்: 430)**

மேலும் ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அறிவிக்கும் மற்றொரு நாயகமொழியில்,

**இயற்கை மரபுகள் பத்தாகும். அவை:**

1. மீசையைக் கத்தரித்தல்.
2. தாடியை வளரவிடுதல்
3. பல் துலக்குதல்.
4. நாசிக்குத் தண்ணீர் செலுத்திச்சீந்துதல்.
5. நகங்களை வெட்டுதல்.
6. கைவிரல்களை கோதிக் கழுவுதல்
7. அக்குள் முடியை அகற்றுதல்

8. மர்ம உறுப்பைச் சுற்றியுள்ள் முடிகளை மழித்தல்.

9. சிறுநீர் கழித்தபின் சுத்தம் செய்தல்.

10. வாய் கொப்பளித்தல்.

(ஆதாரம்: முஸ்லிம்.)

அடுத்து (அல் குர் ஆன் 124) வது வசனத்திற்கு இப்னு அப்பாஸ்(ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் விளக்கம் அளிக்கும் ஒரு செய்தியை இப்னு ஹாத்தம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:- தூய்மை தொடர்பானதும் வணக்கம் தொடர்பானதும் ஆகியவை பத்து விசயங்களாகும்.அவற்றில்

ஆறு மனிதனின் தூய்மை தொடர்பானது:-

1. மர்ம உறுப்பைச் சுற்றியுள்ள முடிகளை மழித்தல்.

2. அக்குள் முடியை அகற்றுதல்

3. விருத்தசேதனம் செய்தல்,
இந்த மூன்றும் ஒன்று தான் என இப்னு ஹுபைரா (ரலியல்லாஹு அன்ஹு) கூறுகிறார்கள்.

2. நகங்களை வெட்டுதல்.

3. மீசையைக் கத்தரித்தல்.

4. மிஸ்வாக் செய்தல்.

5. ஜும்ஆ நாளில் குளித்தல்.

நான்கு புனித ஹஜ்ஜு கிரியைகளின் போது நிறைவேற்ற வேண்டியவை:-

1. தவாபு செய்தல்

2. ஸயீ செய்தல்.

3. ஸபா மர்வாவுக்கிடையே ஸயீ செய்தல்.

4. (மினாவில) கல் எறிதல்.
இக்ரிமா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறியதாவது:-
இறைமார்க்கத்தின் விதிமுறைகளின் மூலம் அவற்றை முழமையாகக் கடைபிடித்தவர் இப்றாஹீம் (ரலியல்லாஹு அன்ஹு) அவரகள்.

‘இப்றாஹீமை அவருடைய இறைவன் பல கட்டளைகள் மூலம் சோதித்ததை எண்ணிப்பாருங்கள்.

அவர் அ வற்றை முழுமையாக நிறைவேற்றினார் ’ என்று அல்லாஹ் கூறியுள்ளான் என்று இப்னு அப்பாஸ்(ரலியல்லாஹு அன்ஹு ) அவர்கள் கூறினார்கள்.

அப்போது நான் , எந்தக் கட்டளைகள் மூலம் அல்லாஹ் இப்றாஹீம் (அலை ஹிஸ்ஸலாம்) அவர்களை சோதித்தான் ? எவற்றை அவர்கள் முழுமையாக நிறைவேற்றினார்கள் ? என்று இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் பின் வருமாறு பதில் அளித்தார்கள்.

## இஸ்லாம் மொத்தம் முப்பது கூறுகள் கொண்டதாகும்

அவற்றில் பத்துக் கூறுகள் பராஅத் (அல்லது தவ்பா) அத்தியாயத்தில் (‘பாவமன்னிப்புக் கோரி) மீண்டவர்கள், (இறைவனை வழிபடுபவர்கள்) எனத் தொடங்கும் (அல் குர் ஆன் 9:112) வது வசனத்தில் இடம் பெற்றுள்ளன.

**முதல் பத்துக் கூறுகள்:-**

1. பாவமன்னிப்புக் கோருதல்.
2. வழிபாடு.
3. இறைப்புகழ்
4. நோன்பு நோற்றல்.
5. குனிந்து (ருகூவு) வணங்குதல்.
6. சிரவணக்கம் (ஸஜ்தா) செய்தல்
7. நன்மையை ஏவதல்.
8. தீமையைத் தடுத்தல்.
9. இறை வரம்புகளைப் பேணுதல்.
10. இறை நம்கிக்கை கொள்ளல்.

**இரண்டாவது பத்துக் கூறுகளாவன:-**

அல் முஃமினூன் என்னும் (அல் குர் ஆன் 23) வது அத்தியாயத்தில் ‘ இறை நம்பிக்கையாயர்கள் வெற்றி பெற்றனர்’ எனத் தொடங்கும் முதல் பத்து வசனங்களில் இடம் பெற்றுள்ளன.
அவை:-

1. பணிந்து தொழுவது.
2. வீண்விளையாட்டுகளைப் புறக்கணிப்பது.
3. ஸகாத் வழங்குவது.
4. கற்பைக்காப்பது.
5. அமானிதங்களை (பிறர் உடைமையைக்) காப்பது.
6. வாக்கைக் காப்பது.
7. நிலையாகத் தொழுவது (அல் குர் ஆன் 23:2-9)
8. தீர்ப்பு நாளை நம்புவது (அல் குர் ஆன் 70:26)
9. இறைவன் அளிக்கும் வேதனை குறித்து அஞ்சுவது (அல் குர் ஆன் 70:27)
10. சாட்சிகளை நிலை நிறுத்துவது (அல் குர் ஆன் 70:33)

**மூன்றாவது பத்துக் கூறுகளாவன:-**

அல்-அஹஸாப் எனும் அத்தியாயத்தில் (இறைவனுக்கு முற்றிலும் அடிபணியும் ஆண்களும் பெண்களும் எனத் தொடங்கும் (அல் குர் ஆன் 33:35) வது வசனத்தில் இடம் பெற்றுள்ளன.
அந்தப் பத்துக் கூறுகளாவன:-

1. இஸ்லாத்தை ஏற்றல்.
2. இறை நம்பிக்கை கொள்ளல்.
3. கட்டுப்பட்டு நடத்தல்
4. உண்மை பேசுதல்.
5. பொறுமை காத்தல்.
6. இறையச்சம் கொள்ளல்.
7. தர்மம் செய்தல்.

8. நோன்பு நோற்றல்.

9. கற்பைப் பேணுதல்.

10. அல்லாஹ்வை அதிகமதிகம் (நினைத்தல்) திக்ரு செய்தல்.

(அல் குர் ஆன்: 33:35)

இவையனைத்தையும் இப்றாஹீம் (அலை ஹிஸ்ஸலாம்) அவர்கள் முழுமையாக நிறைவேற்றினார்கள் இதையே இறைவன் 'அல்லாஹ் வின் கட்டளைகளை முழுமையாக நிறைவேற்றிய இப்றாஹீமின் (ஏடுகளில் உள்ளவை அவனுக்கு அறிவிக்கப்படவில்லையா ?) (அல் குர் ஆன் 53:57) என்று கூறியுள்ளான்.

www.bathusha.com
Tamil Islamic Online Radio 24h

**உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்**

**AL ALIM S.A.M.SEYED JAHAN MOWLANA HUSAINY JALALIY**

**BATHUSHA.COM**